பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 01 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சமூக வளர்ச்சிக்கான ஆராய்ச்சிக்கு பல்கலைக்கழகங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

2. வலுவான, பாதுகாப்பான இந்தியாவை உருவாக்குவதற்கு இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்று முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் செளகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. போலியோ இல்லாத இந்தியாவின் 15-ஆவது ஆண்டு விழா இன்று கொண்டாடப்பட்டது.

4. ஈரான் நாட்டுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 சதவீத கூடுதல் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

5. இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Lakshya Sen** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**- இனி விரிவான செய்திகள் —**

<<<<<<>>>>>>

சமூக வளர்ச்சிக்கான ஆராய்ச்சிக்கு பல்கலைக்கழகங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய அறிவியல் ஆராய்ச்சி கல்விக்கழகத்தின் நிலைக்குழு கூட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசித்ததாக கூறினார்.

இதன்மூலம், சிறந்த விஞ்ஞானிகள் உருவெடுப்பார்கள் என்று திரு தர்மேந்திர பிரதான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம் ஊரகப் பகுதிகளில் **125** வேலை நாட்களை உறுதி செய்வதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண் சாகுபடி பணி நடைபெறும் காலகட்டத்தில் **60** நாள்

இந்த சட்டத்தின்கீழ் வேலையில்லாத நாட்களாக அறிவிக்கப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டினார்.

தண்ணீர் சேமிப்பு, ஊரக கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அரசு திட்டங்களை ஒருங்கிணைத்து இந்த புதிய சட்டம் கொண்டு வரப்பட்டு இருப்பதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<>>>>>

மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இந்தியாவில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாடு தொடர்பாக வெள்ளை மாளிகையில் அதிகாரி திரு மைக்கேல் **Kratsios** -வுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

பின்னர் அமெரிக்க நிதித்துறை அமைச்சர் திரு **Scott Bessent** தலைமையில் நடைபெற்ற அரிய தாதுக்கள் குறித்த கூட்டத்தில் அமைச்சர் கலந்து கொண்டார்.

<<<<<>>>>>

நாட்டின் ஜனநாயக கட்டமைப்பை அகற்றுவதற்கான முயற்சியை திரிணமுல் காங்கிரஸ் மேற்கொண்டுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு **Tuhin Sinha,** திரிணமுல் காங்கிரஸ் கட்சித்தலைவரும், மேற்குவங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கு தொடர்பாக ஐபேக் நிறுவனத்தின் மீது சோதனை மேற்கொண்டபோது அதனை தடுத்து நிறுத்தியதாக கூறினார்.

திரிணமுல் காங்கிரஸ் கட்சி உள்நோக்கத்துடன் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்போது வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஒருவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதால், அவர் தற்கொலை செய்துகொண்டதையும் திரு **Tuhin Sinha** சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது பாகிஸ்தான் — இந்தியா ராணுவ தலைமை இயக்குநர்கள் சந்திப்பில் அணு ஆயுத பயன்பாடு குறித்து விவாதிக்கப்படவில்லை என்று ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் **Upendra Dwivedi** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாகிஸ்தான் மண்ணிலிருந்து ஏவப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே ஆபரஷேன் சிந்தூர் நடவடிக்கை அமைந்ததாக தெரிவித்தார்.

பாகிஸ்தானில் உள்ள அரசியல்வாதிகளும், பொதுமக்களும் அணு ஆயுதம் தொடர்பாக தெரிவிக்கும் கருத்துக்களுக்கு தாம் எந்த விளக்கமும் அளிக்க இயலாது என்றும் அவர் கூறினார்.

வழக்கமான முறைப்படியான ராணுவ நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதில், இந்தியா உறுதியுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரை பாகிஸ்தான் தாக்குதலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கிலேயே முப்படைகளும் செயல்பட்டதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானில் இருந்து ஊடுருவ முயன்ற நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் எல்லை கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதிக்கு அப்பால் பாகிஸ்தான் மண்ணிலிருந்து செயல்பட்டு வந்த தீவிரவாத

முகாம்கள் ராணுவ நடவடிக்கையில் அழிக்கப்பட்டதாகவும் , ராணுவ தலைமை இயக்குநர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டதாகவும் ராணுவ தளபதி ஜென்ரல் **Upendra Dwivedi** தெரிவித்தார்.

**<<<<<◇>>>>>**

போலியோ இல்லாத இந்தியாவின் **15-**ஆவது ஆண்டு விழா இன்று கொண்டாடப்பட்டது.

கடந்த **2009-**ஆம் ஆண்டு இந்தியாவில் போலியோவால் பாதிக்கப்பட்ட **741** குழந்தைகள் கண்டறியப்பட்ட நிலையில், **2011-**ஆம் ஆண்டுக்கு பிறகு ஒரு குழந்தை கூட போலியோவால் பாதிக்கப்படவில்லை.

அரசின் போலியோ சொட்டு மருந்து திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால், இந்தியாவில் போலியோ நோய் முற்றிலும் அகற்றப்பட்டதாக சர்வதேச குழந்தைகள் நல மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் **Naveen Thacker** தெரிவித்துள்ளார்.

**<<<<<◇>>>>>**

வலுவான, பாதுகாப்பான இந்தியாவை உருவாக்குவதற்கு இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்று முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.

குடியரசு தின விழாவில் பங்கேற்கும் தேசிய மாணவர் படையினரிடையே உரையாற்றிய அவர், நாட்டின் இலக்குகளை எட்டுவதற்கு தேசப்பற்றுடன் இளைஞர்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இளைஞர்கள் சரியான பாதையை தேர்ந்தெடுத்து நாட்டின் மாண்புகளை காக்க வேண்டும் என்றும், நாட்டின் வளர்ச்சிக்காக தங்களது பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் ஜென்ரல் அனில் சௌகான் தெரிவித்தார்.

**<<<<<◇>>>>>**

தேசிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், உறுதியளிக்கப்பட்ட நிதி பலன்களை வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்க உயர்மட்ட குழு ஒன்றை ஓய்வூதிய நிதிய ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம் அமைத்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த ஆணையத்தின் சட்ட

விதிமுறைகளின்படி, இந்த உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஓய்வூதியதாரர்களுக்கான வருவாயை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சகம் கூறியுள்ளது.

டாக்டர் எம் எஸ் சாஹூ தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவில், மொத்தம் 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

சட்டம், நிதி, காப்பீடு, முதலீட்டுச்சந்தை உள்ளிட்ட அமைப்புகளை சேர்ந்த நிபுணர்கள் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<<>>>>>

பொது இடங்களில் தெரு நாய்களுக்கு உணவளிப்பது குறித்து உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் திரு விக்ரம் நாத், திரு சந்தீப் மேத்தா, திரு என் வி அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு இதுதொடர்பான வழக்கை கடந்த ஜூலை மாதம் முதல் விசாரித்து வருகிறது.

தெரு நாய் கடியினால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு பொறுப்பேற்பது யார் என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலத்தை சேர்ந்த பிரபல நடிகரும், பாடகருமான பிரசாந்த் தமாங் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரவித்துள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தமது கலைத்திறமையின் மூலம், உலக அளவில் தனி முத்திரை பதித்தவர் தமாங் என்று கூறியுள்ளார்.

ஏராளமான திறமைகளுடன், உறுதியோடு செயல்படுவதிலும், சாதனைகள் படைப்பதிலும் வல்லவர் என்றும் அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

அவருடைய வாழ்க்கை பலருக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது என்றும், இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ஈரான் நாட்டுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 சதவீத கூடுதல் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், ஈரான் நாட்டில் போராட்டம் நடத்துவோர் மீது அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதார நடவடிக்கைகள் மூலம் ஈரானில் உணவுப் பொருட்களின் விலை 70 சதவீதம் அதிகரித்துள்ளது.

சீனாவுக்கு அடுத்தப்படியாக ஈராக், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், துருக்கி, இந்தியா ஆகிய நாடுகள் ஈரானுடன் வர்த்தகம் செய்து வருகிறது.

இந்தியாவிலிருந்து ஈரான் நாட்டுக்கு பாஸ்மதி அரிசி, பழங்கள், காய்கறிகள், மருந்துகள் உள்ளிட்டவை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பு ஈரான் உடனான வர்த்தகத்தை பாதிக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

கஜகஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் இந்திய மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

அந்நாட்டின் **Oskemen City**-யில் உள்ள மருத்துவ பல்கலைக்கழகம் ஒன்றில் படித்துவந்த இந்திய மாணவர்கள் **11** பேர் சுற்றுலா சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதில் அவர் உயிரிழந்ததாக கஜகஸ்தானுக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த இரண்டு மாணவியர் அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Lakshya Sen** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-12, 21-15,** என்ற செட் கணக்கில், சகநாட்டு வீரர் ஆயுஷ் ஷெட்டியை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Treesa Jolly** — காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இந்த இணை, **21-15, 21-11** என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Sukitta Suwachai — Ornnicha** இணையை வென்றது.

------------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி — குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

நவி மும்பையில் நடைபெறும் இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

**<<<<<<END>>>>>**